# சீர்காழி நகராட்சி
# சாதாரண கூட்டம்



2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05.02.2018 திங்கள் கிழமை மாலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர், ஆணையர்
சீர்காழி நகராட்சி.

| | |
|---|---|
| பொருள் எண்.1 | தமிழ்நாடு உள்ளாட்சிகளின் வார்டு மறுவரையறை ஒழுங்குபடுத்துதல் 2017 நெறிமுறைகள் மற்றும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் கடிதம் ந.க.எண்.3174/2017/EG-1 , நாள்.19.10.2017 கடிதத்தின்படி சீர்காழி நகராட்சியிலுள்ள 24 வார்டுகளையும் 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் 31.03.2017 வரையிலுள்ள சொத்து வரி கேட்பு பதிவேட்டின் படி குடியிருப்புகள் ஆகியவற்றை கணக்கிற்கொண்டு வரைவு மறுவரையறை கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டுள்ளதை பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அறியும்வண்ணம் 28.12.2017முதல்05.01.2018வரைபார்வைக்கு வைக்கப்பட்டு ஆட்சேபணைகள்/கருத்துருக்கள் எழுத்துபூர்வமாக 12.01.2018 வரை இந்நகராட்சியில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மொத்தம் 31 எண்ணிக்கைகள். அதில் சில நபரிடமிருந்து ஒரே கோரிக்கை தொடர்பாக பெறப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட மனுக்கள் எண்ணிக்கை–9 மற்றும் பிற கோரிக்கை மனுக்கள் – 22 ஆகக் கூடுதல் – 31 மனுக்கள் இதில் 10 எண்ணிக்கை மனு ஏற்றுக்கொள்ளப்பட்டன. 21 மனுக்கள் மீதான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வழிவகை இல்லாததால் நிராகரிக்கப்பட்டன. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட 3 கோரிக்கைகளின் படி வார்டு எண்கள். 3,5,9,10,20 மற்றும் 21 ஆகிய 6 வார்டுகள் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி வரைவு வார்டு மறுவரையறை விபரங்கள் புத்தக வடிவில் தயார் செய்யப்பட்டுள்ளதை உரிய வழியாக அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>இறுதி வரைவு வார்டு மறுவரையறை செய்யப்பட்ட கருத்துருவை பார்வையிட்டு ஒப்புதல் அளித்து உரிய வழியாக அனுப்பிவைக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br><br>(ந.க.எண். 3639 /2017/எப்1)<br>நகர்மன்ற தீர்மான எண்–170 நாள்.05.02.2018. அனுமதிக்கப்படுகிறது. |

**பொருள் எண்.2**

திடக்கழிவு மேலாண்மை விதி 2016 – ன் படி சீர்காழி நகராட்சிப் பகுதிகளில் , துணை விதிகள் இயற்றப்பட்டு நாகபட்டினம் மாவட்ட அரசிதழில் 11.07.2017 வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது . மேற்கண்ட அரசிதழில் கீழ்கண்டுள்ள இனங்கள் விடுபட்டு போனதால் , நகராட்சி மூலம் கழிவுகளை அப்புறப்படுத்த சேவை கட்டணம் வசூல் செய்ய இயலாத சூழ்நிலையின் காரணமாக கீழ்கண்டுள்ள நிலுவைகளில் இருந்து உற்பத்தியாகும் கழிவுகளை அப்புறப்படுத்தும் பொருட்டு நிர்ணயம் செய்யப்பட சேவை கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | காலம் | கட்டணம் |
|---|---|---|---|
| 1 | பாத்திரக்கடை | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 2 | சலூன் கடை | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 3 | தங்கும் விடுதி | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 4 | ரைஸ்மில், ஆயில்மில், மாவுமில் | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 5 | எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் கடை மற்றும் 4 சக்கர வாகனம் உதிரிாகம் விற்பகம் | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 6 | உரக்கடை | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 7 | ஜீவல்லரி கடை மற்றும் கவரிங்கடை | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 8 | போட்டோ ஸ்டுடியோ | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 9 | ஜெராக்ஸ் கடை | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 10 | பெட்ரோல் பங்க் | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 11 | செல்போன், ரீஜார்ஜ்கடை | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 12 | வெல்டிங் பட்டரை | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 13 | டுடோன் | மாதம் ஒன்றிற்கு | 50 |
| 14 | இரத்த பரிசோனை நியைம் | மாதம் ஒன்றிற்கு | 50 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்–3440/2013/எச்1)

நகர்மன்ற தீர்மான எண்–171 நாள்.05.02.2018. அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்.3**

சீர்காழி நகராட்சி – நகரட்சிக்கு சொந்தமான கலவை உரத்திடலில் குப்பைகளை பிரித்து குப்பைகள் விரைவில் மக்குவதற்கு (E.M.I Effective Microorgauisms) என்ற நுண்ணுயிர் திரவத்தினைபயன்படுத்தி கலவை உரம் தயாரிக்கும் பணிக்கு E.M.I நுண்ணுயிர் திரவம் 50 லிட்டர் வாங்கி வழங்கவும் தமிழ்நாடு மல்டிபர்போஸ் இண்டிகோ சர்வீஸ் திருச்சி என்ற அரசு கூட்டுறவு துறையை சார்ந்த நிறுவனத்தின் விலைப்புள்ளியின்படி மேற்கண்ட E.M.I நுண்ணுயிர் திரவம் 50 லிட்டர் வாங்கி வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.50,000/– க்கும் தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| | (ந.க.எண்–323/2018/எச்1)<br>நகர்மன்ற தீர்மான எண்–172 நாள்.05.02.2018. அனுமதிக்கப்படுகிறது |
| பொருள் எண்.4 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–18 சட்டநாதர் காலணியில் தார் சாலை 2015-16 ஆம் ஆண்டில் போடப்பட்டது. அப்போது அரசு மருத்துவமனை சாலையில் இருந்து சட்டநாதர் காலணி சந்து செல்லும் முகப்பில் குறுகிய இடமாக இருந்ததால் தார் சாலை அமைக்க இயலவில்லை. தினமும் நூற்று கணக்கான பொது மக்கள், மாணவ மாணவிகள் அவ்வழியை பயன்படுத்தி வருகிறார்கள் எனவே முகப்பு பகுதி அடிக்கடி சேறும் சகதியும் ஆகிவிடும் காரணத்தால் பொது மக்களின் நலன் கருதி அவ்விடத்தை சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே பொது மக்கள் கேட்டுக்கொண்டதற்கினங்க நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் நேரில் ஆய்வு செய்து கூறிய அறிவுரையின் படி பேவர் பிளாக் நடைபாதை அமைக்க திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.0.71 இலட்சத்தை நகராட்சி பொது நிதி திட்டத்தின் கீழ் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>நகர்மன்ற தீர்மான எண்–173 நாள்.05.02.2018. அனுமதிக்கப்படுகிறது |
| பொருள் எண்.5 | சீர்காழி நகராட்சி கல்வி வரி நிதி திட்டம் -2018-19-ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமானதும் பராமரிப்பு பணி மோற்கொண்டும் வரும் துறையூர் நகராட்சி தொடக்கப்பள்ளியின் தரை தளம் மேற்கூரை, சுற்றுச் சுவர் மற்றும் கழிவறை ஆகியவை முற்றிலும் பழுதடைந்துள்ளதாக அப்பள்ளி தலைமை ஆசிரியரிடம் வரப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் நேரடி ஆய்வு செய்ததை தொடர்ந்து மேற்படி பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது தெரியவந்ததால் மாணவ, மாணவிகளின் கல்வி நலன் கருதி மேற்படி பள்ளியினை பராமரிப்பு பணி செய்வது மிகவும் அவசர அவசியமாகிறது. எனவே அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரு.4.00 இலட்சத்தினை கல்வி வரி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>நகர்மன்ற தீர்மான எண்–174 நாள்.05.02.2018. அனுமதிக்கப்படுகிறது. |

(ஒம்) திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–05.02.2018

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.